கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 31.12.2019

# 31.12.2019ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

**01)** இந்நகராட்சியில் 1 முதல் 45 வார்டுகளின் சொத்துவரி, காலிமனைவரி, தொழில்வரி, வரியில்லா இனங்கள் மற்றும் குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம் ஆகியவற்றின் 2018–19ம் ஆண்டு கணக்குகளை கணினியில் நகல் எடுத்து பைண்டிங் செய்து தணிக்கையில் காண்பிப்பதற்கும், நகல் எடுத்தற்குரிய கட்டணம் Speed System xerox, குடந்தை நிறுவனத்திற்கு தொகை வழங்குவதற்கும் அதற்குரிய உத்தேச கூடுதல் செலவினத்தொகை ரூ.1.00 லட்சத்தினை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஏற்கனவே மன்றம் தனது தீர்மான எண்.90, நாள்.31.07.18ல் மேற்கண்ட பணிக்குரிய உத்தேச செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
3. ஏற்கனவே மன்றம் தனது தீர்மான எண்.201, நாள்.31.10.18ல் ஸ்பீடு சிஸ்டம்ஸ் அண்ட் ஜெராக்ஸ் நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

**ந.க.எண். 11474 /2015 / அ1**

---

**02)** கும்பகோணம் நகராட்சி 45 வார்டுகளிலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் 2018–19ம் ஆண்டு கேட்பு பதிவேடுகள் கணினியில் பிரிண்ட் எடுத்ததை பைண்டிங் செய்திடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.60 ஆயிரத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 13504 /2019 / அ1**

---

**03)** கும்பகோணம் நகராட்சி 45 வார்டுகளிலும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் வரித்தொகைகளை உடன் நகராட்சிக்கு செலுத்திட பொதுமக்களுக்கு ஆட்டோ மூலம் ஒலிப்பெருக்கியில் விளம்பரம் செய்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்தினை பொதுநிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரிவசூல் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதற்கும் உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 13504 /2019 / அ1**

---

**04)** இந்நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் உணவு கழிவுகள் மற்றும் சமையலறை கழிவுகள் மூலமாக உயிரி எரிவாயு தயாரிக்கப்பட்டு அதன்மூலம் மின்சார உற்பத்தி செய்யும் Bio-Menthation Plant அமைக்கப்பட்டு உள்ளது. மேற்கண்ட Bio menthation Plant-ற்கு தேவையான உணவு கழிவுகள் தேவையான அளவு கிடைக்காத காரணத்தால், இறைச்சி கழிவுகளான மீன் மற்றும் மாமிச கழிவுகளை அரைத்து உயிரி எரிவாயு தயார் செய்திட தேவையான cutter இயந்திரம் வாங்கிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.16,80,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு:</u> அனுமதியளிக்கலாம்.

**ந.க.எண். /2019 / இ2**

---

**05)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பிலுள்ள ஆணையர் பயன்பாட்டு ஸ்கார்பியோ வாகனம் TN.68.Q.1116 -ஐ சர்வீஸ் செய்யும் பணிக்குஅரசு அங்கீகாரம் பெற்ற மகேந்திரா நிறுவனத்தின் நேரடி டீலரான சிவா ஆட்டோ மொபைல்ஸ், மருதாநல்லூர், கும்பகோணம் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒரு விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | சிவா ஆட்டோ மொபைல்ஸ்,<br>மருதாநல்லூர், கும்பகோணம். | Rs.30000/- |

__அலுவலக குறிப்பு__

1) அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையாக இருப்பதால் வரப்பெற்ற ஒரு விலைப்புள்ளியான சிவா ஆட்டோ மொபைல்ஸ், மருதாநல்லூர், கும்பகோணம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) இச்செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்
3) பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 12889/201 9/இ3**

---

**06)** கும்பகோணம் நகராட்சியின் வருங்கால தேவையினை கருத்தில் கொண்டு 23.34 எம்.எல்.டி குடிநீர் பெறுவதற்கும், நகரின் விடுபட்ட பகுதிகளில் பகிர்மான குழாய்கள் அமைத்திடவும் மற்றும் நகரின் அனைத்து பகுதிகளுக்கும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்திடவும், மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன், அட்டல் நகர்புற புத்துணர்வு மற்றும் நகர்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT) 2016–17ன் கீழ் ரூ.40 கோடியே 50 இலட்சம் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (MC2) துறை அரசாணை எண்.111 நாள் 25.10.2017–ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடபட்டுள்ளது.

| Sl. No. | Name of the work | Project Cost | Funding Pattern (Rs. in crore) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | GOI Share 50% | GOTN Share 20% | ULB share under | |
| | | | | | Own Fund | ADB/ TUFIDCO/ TNUIFSL LOAN |
| 1. | Improvement to Water Supply Distribution System (Rezoning) in Kumbakonam Municipality | 40.50 | 20.25 | 8.10 | 4.00 | 8.15 |

இப்பணிக்கான மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் 13.11.2017–ம் தேதிய செயல்முறை உத்தரவு ந.க.எண் 18281/2017/DO1 –ன்படி ரூ.44.24 கோடிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு 20.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்த தொகை ரூ.46,48,08,706.67க்கு சென்னை, Keyem Engineering Enterprises நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

மேலும் இப்பணிக்கு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் TUFIDCO அவர்களின் 13.9.2019–ம் தேதிய கடிதம் எண்.TUFIDCO/AMRUT-IF/KMU/953/AM(m)/2019ன்படி AMRUT Incentive Fund ரூ.7.00 கோடி ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலைகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்க, சாலை சீரமைப்பு கட்டணமாக ரூ.96.50 இலட்சம் மட்டுமே மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலைகளில் குழாய் பதிக்க சீரமைப்புக் கட்டணமாக ரூ.335.10 இலட்சம் செலுத்துமாறு கோட்ட பொறியாளர், தஞ்சாவூர் அவர்கள் தெரிவித்ததின் பேரில் மேற்படி தொகை முழுவதுமாக செலுத்தப்பட்டுள்ளது. இதனால் கூடுதலாக 238.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இப்பணியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டத் தொகை ரூ.40.50 கோடி. ஒப்பந்த தொகை ரூ.46,48,08,706.67 ஆகும். இத்திட்டப்பணி முடிவடையும் காலத்தில் திட்ட ஒதுக்கீட்டினை விட கீழ்க்கண்ட விபரப்படி கூடுதல் செலவினம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

| திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. கோடியில் | Revised cost of the tender ரூ. கோடியில் | ஒப்பந்த தொகை ரூ. கோடியில் | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் Price escalation போன்றவற்றிற்கு மதிப்பீட்டினைவிட கூடுதலாக எதிர்பார்க்கப்படும் செலவினம் ரூ. கோடியில் | | எதிர் பார்க்கப்படும் மொத்த செலவினம் ரூ. கோடியில் (கலம் 3+4) | நிதி ஒதுக்கீட்டினை விட கூடுதலாகும் செலவினம் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 |
| 40.50 | 48.03 | 46.48<br>464808706.67 | Supplimental Items | 200.00 | 59.93 | 47.98% கூடுதல் |
| | | | Price Escalation | 400.00 | | |
| | | | O & M Expenses | 290.00 | | |
| | | | Payment to Other Department | 300.00 | | |
| | | | Total | **1190.00** | | |

இத்திட்டப் பணியில் இதுவரையில் 93 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகளும் 31.03.2020க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.40.50 கோடி மட்டுமே என்பதாலும், இத்திட்டப் பணிக்கான ஒப்பந்த தொகை ரூ.46,48,08,706.67 ஆக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியில் மூலமதிப்பீட்டில் வழிவகை செய்யாத கூடுதல் இனங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், சாலை சீரமைப்புத் தொகைக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு செலுத்தப்பட்ட கூடுதல் தொகை, Price Escalation போன்ற காரணங்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையினைவிட மேற்கண்ட இத்திட்டப்பணிக்கு எதிர்பாக்கப்படும் மொத்த செலவினம் ரூ.59.93 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க அரசினை கோர மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 8303./2017/WS/இ2**

---

**07)** இந்நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட மத்திய, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன், அட்டல் நகர்புற புத்துணர்வு மற்றும் நகர்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT) 2016–17–ன் கீழ் ரூ.59.84 கோடி கீழ்க்கண்ட நிதி பங்களிப்பின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (MC2) துறை அரசாணை எண்.111 நாள் 25.10.2017–ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| Sl. No. | Name of the work | Project Cost | Funding Pattern (Rs. in crore) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | GOI Share 50% | GOTN Share 20% | ULB share under | |
| | | | | | Own Fund | ADB/ TUFIDCO/ TNUIFSL LOAN |
| 1. | Providing UGSS to left out areas in Kumbakonam Municipality | 59.84 | 29.92 | 11.97 | 5.98 | 11.97 |

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், டுபிட்கோ, சென்னை அவர்களின் கடிதம் எண் TUFIDCO/AMRUT-IFP/630/AM(M)/2017 நாள் 25.9.2017–ன்படி இந்நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட உள்ளாட்சியின் பங்குத் தொகையான ரூ.17.85 கோடியில் அம்ரூட் திட்டத்தில் ஊக்க நிதியாக (2016–17) ரூ.17.15 கோடி முழு மானியமாக ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பணிக்கு 20.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்த தொகை ரூ.64,14,91,200/–க்கு சென்னை, Keyem Engineering Enterprises நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு

வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. திட்ட ஒதுக்கீட்டு தொகை ரூ.59.84 கோடியினைவிட கூடுதலாகும் தொகையினை முழு மானியமாக நகராட்சிக்கு வழங்க அரசினை கோரி நகர் மன்ற தீர்மானம் 21 நாள் 03.05.2018ன்படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

இப்பணியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.59.84 கோடி, ஒப்பந்தப் தொகை ரூ.64,14,91,200/– இத்திட்டப் பணி முடிவடையும் சமயத்தில் திட்ட ஒதுக்கீட்டினைவிட கீழ்க்கண்ட விபரப்படி கூடுதல் செலவினம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

| வரிசை எண் | திட்ட நிதி ஒதுக்கீடு ரூ. கோடியில் | ஒப்பந்த தொகை ரூ. | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய தொகை மற்றும் Price escalation போன்றவற்றிற்கு மதிப்பீட்டினைவிட கூடுதலாகும் செலவினம் ரூ. கோடியில் | | எதிர் பார்க்கப்படும் மொத்த செலவினம் ரூ. கோடியில் | நிதி ஒதுக்கீட்டினை விட கூடுதலாகும் செலவினம் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 59.84 | 64,14,91,200/– | Supplemental Items | 2.00 | 74.65 | 24.75% கூடுதல் |
| | | | Price Escalation (Anticipated) | 4.00 | | |
| | | | O & M Expenses | 3.50 | | |
| | | | Payment to other department | 1.00 | | |
| | | | | 10.50 | | |

இத்திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகை ரூ.59.84 கோடி மட்டுமே என்பதாலும், இத்திட்டப் பணிக்கான ஒப்பந்த தொகை ரூ.64,14,91,200/– ஆக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியில் மதிப்பீட்டில் இல்லாத கூடுதல் இனங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், Price Escalation போன்ற காரணங்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட தொகையினைவிட மேற்கண்ட இத்திட்டப்பணிக்கு எதிர்பாக்கப்படும் மொத்த செலவினம் ரூ.74.65 கோடிக்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கிட அரசினைக் கோர மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 8303./2017/UGSS/இ2**

---

**08)** இந்நகராட்சிக்கு சொந்தமான குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய மற்றும் புதிய நீரேற்று நிலையங்களில் உள்ள Genset (320 KVA மற்றும் 250 KVA) பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 20.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிக் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினைமன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / அதிகம் |
|---|---|---|
| 1 | M/S.N.Saravanan Contractor, Kumbakonam, | மதிப்பீட்டை விட 0.1% குறைவு |
| 2 | M/S. AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 5.00% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11419/ 2018 /இ3**

---

**09)** இந்நகராட்சிக்கு சொந்தமான வலையப்பேட்டை நீருந்து நிலையத்தில் பழுதுபட்டுள்ள 125 HP திறனுள்ள மின் மோட்டார் பழுதினை சரி செய்யும் பணிக்கு20.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / அதிகம் |
|---|---|---|
| 1 | M/S.N.Saravanan Contractor, Kumbakonam, | மதிப்பீட்டை விட 0.1% குறைவு |
| 2 | M/S. AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 5.00% அதிகம் |

**அலுவலக குறிப்பு** 1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 11393/ 2019 /இ3**

---

**10)** கும்பகோணம் நகராட்சி பராமரிப்பு கீழ் இயங்கி வரும் தலைமை நீரேற்று நிலையங்கள் , நீருந்து நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகிய இடங்களில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்ப் – கள் இயக்குதல், வால்வுகள் திறக்கும் பணியை மேற்கொள்ளும் திரு.என்.சரவணன் ஒப்பந்ததாரருக்கு 06.09.2019 அன்று பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது 13.11.2019 அன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எனவே 01.11.2019 முதல் 13.11.2019 வரை ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.114000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு,

**அலுவலக குறிப்பு**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்.

**ந.க.எண். 4089/2015 /E3**

---

**11)** இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகனம் TN49 AX 2908புதிய MRF டயர்கள் (டியூபுடன்) – 4 எண்ணிக்கை வாங்கி பொருத்தும் பணிக்குஅரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.28000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்
2) இச்செலவினத்தை பொது நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்

**ந.க.எண். 12118/ 2019/இ3**

---

**12)** பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியில் 14.11.2019 அன்று வார்டு எண் 26 காமராஜர் சாலையில் ஹோட்டல் கிருஷ்ணா பவன் அருகில் அடைப்பு நீக்கும் பணியில் ஆள் நுழைவு தொட்டி மூடியினை திறந்து ஜெட்ராடிங் வாகனத்தின் ஹோஸ் குழாயினை ஆய்வுக் குழியில் சொருகும்பொழுது மயக்கமுற்று தொட்டி உள்ளே விழுந்து உயிரிழந்த திரு.கே.சாதிக்பாட்சா அவர்களது இறப்பு தொடர்பாக சென்னை, Safaikarmachari Andolan சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். WMP No.33130 of 2019 in WP (PIL) No.17380/2017-ல் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கினை நகராட்சி சார்பில் சென்னை, உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.வி. ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் மூலம் வாதாடவும், நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்காடுவதற்கான கட்டணம் மற்றும் இதர செலவினத் தொகை ரூ.15000.–ஐ அன்னாருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 5744/2012/இ4**

**13)** இந்நகராட்சி மேலக்காவேரி காமராஜர் நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டும் பணியினை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள 15.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | என். சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | 1308915.00 | 1315859.00 | மதிப்பீட்டை விட 0.50 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |
| 2. | மெசர்ஸ். ஐடியல் இஞ்சினியரிங், ஒப்பந்ததாரர், அம்மாச்சத்திரம் | | 1306462.00 | மதிப்பீட்டை விட 0.20 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |

<u>**அலுவலக குறிப்பு:**</u>

1. மதிப்பீட்டைவிட 0.20 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.ஐடியல் இஞ்சினியரிங், அம்மாச்சத்திரம், கும்பகோணம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11394/2019/இ2**
**ம.எண் 57/2019–20**

---

**14)** இந்நகராட்சி மேலக்கொட்டையூர் நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு புதிதாக சத்துணவுக் கூடம் கட்டும் பணியினை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள 15.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | என். சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | 1308915.00 | 1296530.00 | மதிப்பீட்டை விட 1.00 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2. | மெசர்ஸ். ஐடியல் இஞ்சினியரிங், ஒப்பந்ததாரர், அம்மாச்சத்திரம் | | 1374980.00 | மதிப்பீட்டை விட 5.00 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

<u>**அலுவலக குறிப்பு:**</u>

1. மதிப்பீட்டைவிட 1.00 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.என்.சரவணன், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11395/2019/இ2**
**ம.எண் 56 /2019–20**

---

**15)** இந்நகராட்சி மேலக்காவேரி காமராஜர் உயர்நிலைப் பள்ளியில் கழிவறை கட்டும் பணியினை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள 15.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | என். சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | 1109327.00 | 1124475.00 | மதிப்பீட்டை விட 1.30 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |
| 2. | மெசர்ஸ். ஐடியல் இஞ்சினியரிங், ஒப்பந்ததாரர், அம்மாச்சத்திரம் | | 1108571.00 | மதிப்பீட்டை விட 0.10 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மதிப்பீட்டைவிட 0.10 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திருவாளர்.ஐடியல் இஞ்சினியரிங், அம்மாச்சத்திரம், கும்பகோணம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11394/2019/இ2**
**ம.எண் 58 /2019–20**

---

**16)** இந்நகராட்சி வார்டு எண்.12, இராமசாமி நகர் பகுதியில் உள்ள சாலைக்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணியினை ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள 15.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | என். சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | 1067412.34 | 1056778.24 | மதிப்பீட்டை விட 1.00 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2. | மெசர்ஸ். ஐடியல் இஞ்சினியரிங், ஒப்பந்ததாரர், அம்மாச்சத்திரம் | | 1120720.16 | மதிப்பீட்டை விட 4.99 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மதிப்பீட்டைவிட 1.00 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.என்.சரவணன், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11394/2019/இ2**
**ம.எண் 54 /2019–20**

---

**17)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகனம் TN49 AX **2908** புதிய MRF டயர்கள் (டியூபுடன்) – **4** எண்ணிக்கை வாங்கி பொருத்தும் பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில்வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | M/s.Sivasakthi Auto Works, Kumbakonam | Rs.27,722 |
| 2 | M/S. Annai sathiya Engineer works, Thiruvarur. | Rs.28,648 |
| 3 | M/s.Dharmaraj Auto Carriage, Thiruvarur. | Rs.28,176 |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ளM/s.Sivasakthi. Auto Works, Kumbakonam நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.12118/2019/ இ3**

---

**18)** கும்பகோணம் நகராட்சிக்கு செந்தமான பேருந்து நிலையத்தில் திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் பேருந்துகளுக்கு காத்திருக்கும் பயணிகளின் நிழற்குடை (Bus bay) மேல்கூரையில் மழை நீர் தேங்கி கீழ் பகுதியில் கான்கிரீட் காரைகள் அனைத்தும் பெயர்ந்து விழும் நிலையில் உள்ளதால் அவற்றை சரிசெய்யவும், பேருந்து நிறுத்தத்தில் சில இடங்களில் பெயர்ந்துள்ள tiles களை சரி செய்யவும் தஞ்சாவூர் மார்க்கம் பொதுக் கழிவறை மேல்கூரையில் சுண்ணாம்பு கலவை மற்றும் tiles போடவும் வருவாய் நிதியின் கீழ் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**11.80** இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோர நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11807/2016/இ2**

---

**19)** வருவாய் நிதியின் கீழ் வார்டு எண் 12 அப்புகுட்டி சந்து பகுதிக்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணியினை ரூ.**6.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர் மன்றம் தனது **29.10.2019**ம் தேதிய தீர்மானம் எண் **512**ல் அனுமதி வழங்கியதன் பேரில் **15.11.2019** அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | என். சரவணன், ஒப்பந்ததாரர், கும்பகோணம். | **555236** | **549704.00** | மதிப்பீட்டை விட **1.00** சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2. | மெசர்ஸ்.ஐடியல் இஞ்சினியரிங், ஒப்பந்ததாரர், அம்மாச்சத்திரம் | | **582967.00** | மதிப்பீட்டை விட **4.99** சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டைவிட 1.00 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.என்.சரவணன், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11283/2019/இ2**
**ம.எண் 53 /2019–20**

---

**20)** கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.05, பிளாக் எண்.01, நகரளவு எண்.74/8, 75/பி, 79/பி மூர்த்தி கலையரங்கத்தில் திருமண மண்டப கட்டுமானத்திற்கும், புதிய நகராட்சி அலுவலகக் கட்டிடம் மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள காலியான இடத்தில் பல்வகை வணிக வளாகக் கட்டிடம் கட்டும் கட்டுமானத்திற்கும் திருத்திய வரைபடம், வடிவமைப்பிற்கு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் பெறுவதற்கும், திருத்திய வடிவமைப்பு வரைபடங்கள் தயார் செய்து Auto cad–ல் புளூ பிரிண்ட் எடுத்திடவும், உத்தேச செலவினமாக ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 13504 /2019 / அ1**

---

**21)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7366/2016/யுபிஎ.2. நாள்.03.09.2018. தேதிய கடிதத்தில் சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை வரைவு துணை விதிகள் தயார் செய்து மாவட்ட அரசிதழில் வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி கும்பகோணம் நகராட்சி பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை மாதிரி வரைவு துணை விதிகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 8235 /2014 /டி3**

---

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**